Source: *Tamil Murasu*, p4
Date: 20 January 2021

# ‘அனைத்துலக ஒத்துழைப்பில் சிங்கப்பூருக்குப் பங்குண்டு’

பலதரப்பு அணுகுமுறையால் சவால்கள் நிலவும் சூழலிலும் அனைத்துலக ஒத்துழைப்பை ஏற்படுத்துவதில் சிங்கப்பூருக்குப் பங்குண்டு என்று நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று கூறியுள்ளது.

உலகளவிலும் எல்லைகளைத் தாண்டிய நிலையிலும் கொவிட்-19 போன்ற சவால்கள் எழச் செய்யும்போது, வலுப்பெற்று மீண்டு வரவும் அனைத்துலக ஒத்துழைப்பு குறைவதைத் தடுக்கவும் சிங்கப்பூர் கைகொடுக்க வல்லது.

இதுவே, கொள்கை ஆய்வுக் கழகம் ஏற்பாடு செய்துள்ள நான்கு நாள் ‘சிங்கப்பூர் பெர்ஸ்பெக்டிவ்ஸ்’ மாநாட்டின் மூன்றாவது நாளான நேற்று கலந்தாலோசித்த குழுவின் இறுதி முடிவாக இருந்தது.

‘பலதரப்பு அணுகுமுறையும் அனைத்துலக ஒத்துழைப்பும்’ என்ற தலைப்பில் குழுவின் கலந்துரையாடல் அமைந்தது.

## உத்திபூர்வ பங்காளித்துவ உறவுகள் வேண்டும்

சிங்கப்பூரின் வெளியுறவுக் கொள்கைக்கு மட்டுமல்லாமல் சிங்கப்பூருக்கே மிக முக்கியமானதாக பலதரப்பு அணுகுமுறை விளங்குவதாக எஸ்.ராஜரத்னம் அனைத்துலக ஆய்வுப் பள்ளியைச் சேர்ந்த பேராசிரியர் ஜோசஃப் லியோவ் குறிப்பிட்டார்.

திறந்த பொருளியல், வர்த்தக அமைப்புமுறை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை சிங்கப்பூர் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

வளங்கள் அதிகம் இல்லாத நிலையில், நாட்டின் முன்னுரிமை அம்சங்களுக்காக உத்திபூர்வ பங்காளித்துவத்தை சிங்கப்பூர் ஏற்படுத்தி வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

## சுயநலத்துடன் செயல்படுவது தவிர்க்கப்பட வேண்டும்

கொள்ளைநோயைச் சமாளிப்பதில் அறிவியல் ரீதியாக முன்னேற்றம் உள்ளதென தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையில் மூத்த தொற்று நோய்கள் மருத்துவ நிபுணராகப் பணியாற்றும் பேராசிரியர் டேல் ஃபிஷர் குறிப்பிட்டார்.

ஆனால், இன்னமும் சில நாடுகளிடம் முறையான பொதுச் சுகாதார உத்திகள் இல்லை என்றும் சேர்ந்து செயல்படும் தன்மை இல்லை என்றும் அவர் கூறினார்.

மற்ற நாடுகளுக்கு முன் தங்களின் சொந்த விருப்பத்தைக் கருதி சில நாடுகள், தேவைக்கும் அதிகமான தடுப்பூசிகளைக் கொள்முதல் செய்வதைப் பற்றியும் அவர் பகிர்ந்துகொண்டார்.

## பரிவர்த்தனை சார்ந்த அணுகுமுறை வேண்டாம்

உத்திபூர்வ போட்டித்தன்மை கொண்ட நாடுகளும் ஒன்றாகச் செயல்பட்டு உலக மக்களுக்காக நல்ல விளைவுகளை ஏற்படுத்தித் தரலாம் என்றார் வெளியுறவு அமைச்சு தூதரகக் கழகத் தலைவர் டான் யீ வோன்.

“பரிவர்த்தனை சார்ந்த அணுகுமுறையை மட்டுமே நாடுகள் பயன்படுத்தினால் பலதரப்பு அணுகுமுறை சரியாக இயங்காமல் போகும்,” என்றார் அவர்.

## மற்ற முக்கிய விவகாரங்கள் மீதும் கவனம் தேவை

“கொவிட்-19 கிருமியைவிட பருவநிலை மாற்றம், சமத்துவமின்மை, உலகின் இயற்கை வளங்கள் குறைதல் என மேலும் பெரிய மிரட்டல் அளிக்கும் விவகாரங்கள் இருந்தாலும் உலகளவில் ஒத்துழைப்பு தேவைப்படும் நிலையை அவை எட்டவில்லை.

“அதனால், கொவிட்-19 மூலம் இப்பெரிய மிரட்டல்கள் மீதும் உலகம் கவனம் செலுத்தத் தொடங்கும் என்பது என் விருப்பம்,” என்றார் கலிஃபோர்னியா லாஸ் ஏஞ்சலிஸ் பல்கலைக்கழகத்தின் புவியியல் பேராசிரியர் ஜேரட் டைமண்ட்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.